
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 43 - கிறிஸ்தவம்

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க. இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 43 - கிறிஸ்தவம்

## புள்ளி வழங்கும் விதம்

### ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் புள்ளிப் பகிர்வின் சாரம்சம்

01. கிறிஸ்தவம் I ஆம் வினாப்பத்திரம் (நேரம் மணி 2)
 பல்தேர்வு வினாக்கள் 50
 ஒரு வினாவிற்கு 01 புள்ளி வீதம் 50 புள்ளிகள் ஆகும்.

02. கிறிஸ்தவம் II ஆம் வினாப்பத்திரம் (நேரம் மணி 3)
 இது பகுதி I பகுதி II என இரு பகுதிகளைக் கொண்டது.

**I ஆம் பகுதி வினாக்கள் 03 ஆகும்**

- 02 வினாக்களுக்கு மட்டுமே விடை எதிர்பார்க்கப்படுகின்றது.
- 01 வினா 4 பிரிவுகளைக் கொண்டது.
- பிரிவு i புள்ளி 02
 ii புள்ளி 04
 iii புள்ளி 06
 iv புள்ளி 08 நான்கு பிரிவுகளுக்கும் மொத்தம் புள்ளிகள் 20

இரு வினாக்களுக்கு (2 × 20) புள்ளிகள் 40 ஆகும்.

**II ஆம் பகுதி வினாக்கள் 05 ஆகும்**

- 03 வினாக்களுக்கு மட்டுமே விடை எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஒவ்வொரு வினாவும் i, ii என இரு பகுதிகளைக் கொண்டது.
- பிரிவு i புள்ளி 10
 ii புள்ளி 10 என ஒரு வினாவிற்கு புள்ளிகள் 20 ஆகும்.
- மூன்று வினாக்களுக்கு (3 × 20) புள்ளிகள் 60 ஆகும்.

03.

| | |
|---|---|
| I ஆம் வினாப்பத்திரம் புள்ளிகள் | 50 புள்ளிகள் |
| II ஆம் வினாப்பத்திரம் புள்ளிகள் | 100 புள்ளிகள் |
| I ஆம் II ஆம் வினாப்பத்திரம் | 50 + 100/2 |
| மொத்தப்புள்ளி | 100 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ 4/5
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ △ 3/5
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ △ 3/5
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

**43 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு உன்னதமான நூலாக இருப்பது
(1) அதன் ஆரம்பமும் முடிவும் விசேடமானதாகயிருப்பதனாலாகும்.
(2) அது ஓர் நூலைவிட எமது வாழ்க்கையாக இருப்பதனாலாகும்.
(3) அது மனிதனுடனும் இயற்கையுடனும் தொடர்புடையதாயிருப்பதனாலாகும்.
(4) அது மனித ஆக்கமாக இருப்பதனாலாகும்.
(5) அதற்குள் இறைவார்த்தை உள்ளடக்கப்பட்டிருப்பதனாலாகும்.

**2.** யூதர்கள் திருமுறை நூலில் சில நூல்களைத் (இணைத் திருமுறை நூல்கள்) தவிர்த்துவிட்டதாக 'யூதரோடுடனான உரையாடல்' என்னும் நூலில் குறிப்பிடும் திருச்சபைத் தந்தை
(1) புனித அம்புறோஸ் ஆவார்.
(2) புனித ஜெறோம் ஆவார்.
(3) புனித அத்தனாசியார் ஆவார்.
(4) புனித அகுஸ்தினார் ஆவார்.
(5) புனித ஜஸ்டின் ஆவார்.

**3.** எலியா இறைவாக்கினர், பால்வழிபாட்டுக் குருக்கள் பற்றிய சம்பவம் நிகழ்ந்த இடம்,
(1) சீனாய் மலை ஆகும். (2) கார்மேல் மலை ஆகும். (3) ஓரேபு மலை ஆகும்.
(4) தாபோர் மலை ஆகும். (5) ஒலிவ் மலை ஆகும்.

**4.** நீதித்தலைவர்கள் எனப்படும் இறையருள் பெற்ற போர் வீரர்கள் பன்னிருவரில், இருவர்
(1) தெபோரா, சாலமோன் ஆவார்.
(2) ஒத்னியேல், மீக்கா ஆகும்.
(3) கிதியோன், தெபோரா ஆவார்.
(4) யாயிர், செக்கரியா ஆவார்.
(5) தொபோரா, பாரக் ஆவார்.

**5.** ஏழைகளிடம் கட்டாயமாக வேலை வாங்குவது மிகக் கடினமான கொள்கையாகி, மக்கள் மிகவும் துன்புறும் நிலைக்குட்படுத்தப்பட்ட அரச யுகம் எது?
(1) தாவீது (2) சாலமோன் (3) யோசியா
(4) எரோபவாம் (5) செதெக்கியா

6. யாவே மரபில் மொழியின் பண்பு யாது?
(1) கற்பனை உருவக அமைப்பிற்கு இடமளிப்பதுடன், உயிருள்ளவை ஆகும்.
(2) மீண்டும் மீண்டும் கூறப்படுவது அதிகமாகக் காணப்படுகிறது.
(3) கலைத்தன்மை வாய்ந்தது, விபரிக்கும் தன்மையற்றது.
(4) அறிவுரையாக அமைந்துள்ளது.
(5) ஒழுங்கு முறையாகவும் சட்டரீதியாகவும் முன்வைக்கப்படுகிறது.

7. படைப்புப் பற்றிய முதற்கதையின்படி படைப்புச் செயலின் உயர்ந்த நிலை ஆவது,
(1) வானத்தையும் பூமியையும் படைத்தமையாகும்.
(2) சூரியனையும் சந்திரனையும் படைத்தமையாகும்.
(3) நீரையும், நிலத்தையும் படைத்தமையாகும்.
(4) ஆணையும் பெண்ணையும் படைத்தமையாகும்.
(5) மரங்களையும் விலங்குகளையும் படைத்தமையாகும்.

8. பாபேல் கோபுரத்துடன் தொடர்புடைய பபிலோனியா, எவ்வித நகரமாக அறிமுகம் செய்யப்படுகின்றது?
(1) அழகிய நகரம் (2) இரக்கத்தின் நகரம் (3) ஆணவத்தின் நகரம்
(4) நம்பத்தகு நகரம் (5) புனிதமான நகரம்

9. இறைவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையிலான உடன்படிக்கையின் வெளிஅடையாளமாக அமைவது,
(1) விருத்த சேதனமாகும். (2) வானவில் ஆகும். (3) பத்துக் கட்டளையாகும்.
(4) நீராகும். (5) பலிப்பீடமாகும்.

10. யாக்கோபு தனது அழகிய மனைவியான ராக்கேலின் மூலம் பெற்ற பிள்ளைகள்,
(1) யோசேப்பு, ரூபன் ஆவர்.
(2) நப்தலி, பெஞ்சமின் ஆவர்.
(3) யோசேப்பு, பெஞ்சமின் ஆவர்.
(4) தான், நப்தலி ஆவர்.
(5) யோசேப்பு, சிமியோன் ஆவர்.

11. பார்வோன் மன்னனின் சீற்றத்திலிருந்து விடுபட மோசே தப்பி ஓடிய நாடு எது?
(1) பெத்தெல் (2) மிதியான் (3) எபிரோன்
(4) ரம்செய் (5) பெயர்செபா

12. பார்வோனும் எகிப்தியரும் இறைவனின் எதிரிகளாகச் செயற்பட்டதனால் அவர்கள் முகங்கொடுத்த பெருந்துன்பங்களின் எண்ணிக்கை எத்தனை?
(1) ஐந்து (2) ஆறு (3) ஏழு
(4) ஒன்பது (5) பத்து

13. இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்தபோது பட்ட கசப்பான துன்பங்களை அடையாளப்படுத்துவது
(1) புளிப்பற்ற அப்பத்தை உண்ணுதல்.
(2) இரசம் அருந்துதல்.
(3) கசப்புக் கீரையை உண்ணுதல்.
(4) செம்மறி ஆட்டின் இறைச்சியை உண்ணுதல்.
(5) ஆட்டின் பாலை அருந்துதல்.

14. பின்வரும் இடங்களைக் கவனத்திற் கொள்க.
A - செங்கடல் அருகில்
B - மாரா என்னும் இடத்தில்
C - டிம்சா பிரதேசம்
D - மாசா, மெரியா என்னும் இடத்தில்
E - சீனாய் பாலை நிலத்தில்
மேற்கூறிய இடங்களில் பாலைவனப் பயணத்தின்போது இஸ்ராயேல் மக்கள் முறுமுறுத்த பிரதான இடங்களாவன
(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E
(4) A, C, D, E (5) B, C, D, E

**15.** அமிலேக்கியரின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள மோசே செபித்தபோது கரங்களை உயர்த்தி வைத்துக் கொண்டிருக்க உதவியவர்கள்
(1) ஆரோனும் யோசுவாவுமாவர்.
(2) ஆரோனும் கூருமாவர்.
(3) மக்கள் தலைவர்களும் கூருமாவர்.
(4) யோசுவாவும் கூருமாவர்.
(5) தாவீதும் யோசுவாவுமாவர்.

**16.** எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர் இருவராகிய 'நாத்தான்', 'குல்தா' ஆகியவர்களின் பெயரில் திருவிவிலியத்தில் நூல்கள் காணப்படாவிட்டாலும் அவர்கள் செய்தவைகள், கூறியவைகள் எழுதப்பட்டுள்ள நூல்கள் யாவை?
(1) எரோமியா, ஆமோஸ் (2) ஆமோஸ், ஓசேயா
(3) அரசர்கள், எசாயா (4) சாமுவேல், அரசர்கள்
(5) யோசுவா, சாமுவேல்

**17.** கி. மு. 701ல் எருசலேம் அசீரியா செனாகெரீப் அரசின் ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் ஏற்பட்ட நம்பிக்கையற்ற, ஆதரவற்ற நிலை மத்தியில் புதிய நம்பிக்கையை ஊட்டும் இறைவாக்கினர் யார்?
(1) செக்கரியா (2) எசாயா (3) மீக்கா
(4) நாத்தான் (5) எரேமியா

**18.** இறைவாக்கினர் எசாயாவின் இறைவாக்குப் பணிக் காலத்தோடு தொடர்புடைய யூதாவை ஆட்சி செய்த மன்னர்களில் இருவர்
(1) யோத்தாம், பெரியஏரோது ஆவர்.
(2) யோசியா, சாலமோன் ஆவர்.
(3) யோத்தம், ஆகாஸ் ஆவர்.
(4) செதெக்கியா, எரோபவாம் ஆவர்.
(5) தாவீது, சாலமோன் ஆவர்.

**19.** நன்மையான விடயங்களைக் கட்டியெழுப்பவும் தீமையான விடயங்களை அழித்துவிடவும் அனுப்பப்பட்ட இறைவாக்கினர்,
(1) எசாயா ஆவார். (2) ஆமோஸ் ஆவார். (3) ஓசேயா ஆவார்.
(4) எசேக்கியேல் ஆவார். (5) எரேமியா ஆவார்.

**20.** நாடுகடத்தப்பட்ட காலத்தில் இறைவாக்கினருடைய பணி குறைவடைந்து சென்ற காலத்தில் பின்வருவனவற்றில் எது தோன்றியதாகக் கருதப்படுகின்றது?
(1) ஞான இலக்கியங்கள் (2) பஞ்சாகமம் (3) அரசர்களின் காலம்
(4) குலமுதுவர்களின் காலம் (5) திருவழிபாடு

**21.** மறை அறிஞர்களின் கருத்தின்படி எந்த ஆசிரியரின் நற்செய்தி நூலாக்கம் ஐந்நூல்களின் செல்வாக்குப்பெற்று எழுதப்பட்டுள்ளது?
(1) புனித லூக்கா (2) புனித மாற்கு (3) புனித யோயன்
(4) புனித தோமஸ் (5) புனித மத்தேயு

**22.** ஒலிவ் மலையில் இயேசு இரத்த வியர்வை சிந்தியதாகக் கூறும் ஒரே ஒரு நற்செய்தியாளர்
(1) புனித பவுல் (2) புனித மத்தேயு (3) புனித மாற்கு
(4) புனித லூக்கா (5) புனித யோவான்

**23.** திருச்சபையின் ஆரம்பகாலத்தில் புனித மாற்கு நற்செய்தி ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுவது,
(1) அப்போஸ்தலர் கைந்நூல் என்றாகும்.
(2) இறைவாக்கினர் கைந்நூல் என்றாகும்.
(3) அரச கைந்நூல் என்றாகும்.
(4) செபத்தின் கைந்நூல் என்றாகும்.
(5) ஆசிவழங்கும் கைந்நூல் என்றாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**24.** தலைமைக் குருவாகிய 'ஸ்கேவா' என்ற யூதரின் பிள்ளைகளும், சுற்றித்திரிந்து பேயோட்டும் யூதர்களும் தொடர்பான நிகழ்வொன்றிற்கு புனித பவுல் முகம் கொடுக்க நேர்ந்தது,

(1) எபேசுவில் ஆகும். (2) ஏதென்சில் ஆகும். (3) பிலிப்பியில் ஆகும்.
(4) கொரிந்தியில் ஆகும். (5) கலாத்தியாவில் ஆகும்.

**25.** 'பேறுபெற்றோர்' என்னும் நிலைக்குட்பட்டு இறை அரசை உரிமையாக்கிக்கொள்ள எமக்கு அழைப்பு விடுவது,

(1) யோர்தான் நதிக்கரையின் மறையுரை மூலமாகும்.
(2) கலிலேயாவில் மறையுரை மூலமாகும்.
(3) மலைப்பொழிவு மூலமாகும்.
(4) நாசரேத்தின் மறையுரை மூலமாகும்.
(5) பெந்தக்கோஸ்தே நாளில் மறையுரை மூலமாகும்.

**26.** அனைத்துக் கிறிஸ்தவனும் குருவாக, இறைவாக்கினராக மற்றும் அரசராக அபிஷேகம் செய்யப்படும் அருளடையாளம்

(1) குருத்துவம் (2) திவ்விய நற்கருணை (3) திருமுழுக்கு
(4) உறுதிப் பூசுதல் (5) மெய்விவாகம்

**27.** திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதல் தொடர்பாகப் புதிய ஏற்பாட்டில் உள்ள மிகப்பழமையான அறிக்கை குறிப்பிடப்பட்டிருப்பது,

(1) 1 கொரிந்தியர் திருமுகத்திலாகும்.
(2) புனித மாற்கு நற்செய்தியிலாகும்.
(3) புனித மத்தேயு நற்செய்தியிலாகும்.
(4) புனித யோவான் நற்செய்தியிலாகும்.
(5) உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலாகும்.

**28.** இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்வை எழுதியுள்ள புனித லூக்கா அவ்விடயத்தில் பின்பற்றியிருப்பது

(1) யூத பாரம்பரியத்தையாகும்.
(2) கிரேக்க பாரம்பரியத்தையாகும்.
(3) உரோம பாரம்பரியத்தையாகும்.
(4) எருசலேம் பாரம்பரியத்தையாகும்.
(5) அந்தியோக்கிய பாரம்பரியத்தையாகும்.

**29.** திருச்சபையின் ஆரம்பமாகவும், புதிய யுகம் ஒன்றின் ஆரம்பமாகவும் அறிமுகம் செய்யப்படுவது,

(1) இயேசுவின் பிறப்பு ஆகும்.
(2) இயேசுவின் உயிர்ப்பு ஆகும்.
(3) தூய ஆவியாரின் வருகையாகும்.
(4) திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியதாகும்.
(5) இயேசுவின் விண்ணேற்பு ஆகும்.

**30.** பின்வரும் பெயர்களை அவதானிக்குக.

A - பிலிப்
B - ஓனேசிமுஸ்
C - தியோபிலஸ்
D - பிரகோர்
E - கொர்னேலியுஸ்

மேற்கூறிய பெயர்களில் ஆரம்பத்திருச்சபையில் திருத்தொண்டர்களாக நியமிக்கப்பட்ட இருவர்

(1) A, C (2) A, D (3) B, C
(4) C, D (5) D, E

**31.** கிறிஸ்தவர்களுக்கு எதிராக இரண்டாவது கலாபனையை ஆரம்பித்த உரோமைப் பேரரசன்

(1) நீரோ (2) திராஜன் (3) தேசியுஸ்
(4) தொமிசியன் (5) மாக்சிமியன்

**32.** உரோமைக் கலாபனைக் காலத்தில் மிளிர்ந்த ஓர் விசேட பண்பாவது,
(1) வீடுவாசல்களை இழந்தமையாகும்.
(2) தொழில்களை இழந்தமையாகும்.
(3) பலதெய்வக் கொள்கையில் ஆழ்ந்தமையாகும்.
(4) நம்பிக்கையில் கிறிஸ்தவ மறை மேலும் வளர்ச்சியுற்றமையாகும்.
(5) பேரரசனோடு மோதல்களை ஏற்படுத்திக் கொண்டமையாகும்.

**33.** கிரேக்க சபைத்தந்தையர்களைச் சேர்ந்தவர் யார்?
(1) புனித ஜெரோம்
(2) புனித அம்புறோஸ்
(3) புனித அகுஸ்தினார்
(4) புனித பெரிய கிரகோரியர்
(5) புனித ஜோண் கிறிசோஸ்தம்

**34.** "கிறிஸ்து பிதாவிலிருந்து செனித்தவர் எனினும் உண்டாக்கப்பட்டவர் அல்ல, பிதாவோடு ஒரே பொருளானவர்" என்னும் இறையியல் எண்ணக்கருவை திருச்சபைக்குக் கொடையாக வழங்கியவர்,
(1) புனித ஜெரோம் ஆவார்.
(2) நாசியானஸ் புனித கிரகோரியார் ஆவார்.
(3) மறைச்சாட்சி புனித ஜஸ்டின் ஆவார்.
(4) அலெக்சாந்திரியாவின் புனித சிறில் ஆவார்.
(5) அலெக்சாந்திரியாவின் புனித அத்தனாசியார் ஆவார்.

**35.** மூவொரு இறைவனில் வீற்றிருக்கும் கிறிஸ்து இறைவனுக்குச் சமமானவர் அல்ல என்பதும், தூய ஆவியானவர் இவர்கள் இருவரையும் விடக் கீழ்நிலையில் உள்ளார் என்ற தப்பறையான கொள்கையைச் சீர்செய்வதற்காகக் கூட்டப்பட்டது,
(1) எபேசு திருச்சங்கம் ஆகும்.
(2) நிசேயா திருச்சங்கம் ஆகும்.
(3) கால்செதோன் திருச்சங்கம் ஆகும்.
(4) இரண்டாவது ஒரேஞ் திருச்சங்கம் ஆகும்.
(5) கொன்ஸ்தாந்தி நோபிள் திருச்சங்கம் ஆகும்.

**36.** கிறிஸ்துவுக்கு ஒரே இறை சுபாவம் மட்டும் இருப்பதோடு மனித சுபாவம் ஓரளவு மட்டுமே உள்ளது என்னும் கருத்தை வெளிப்படுத்தியவர் யார்?

| | | |
|---|---|---|
| (1) ஆரியஸ் | (2) இயுத்திக்கேஸ் | (3) தேர்த்துல்லியன் |
| (4) தியடோசியஸ் | (5) நெஸ்தோரியஸ் | |

**37.** பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.
A - ஆறாம் நூற்றாண்டில் உரோமப் பேரரசின் கிழக்குப் பகுதி இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்களினால் உறுதியற்ற நிலைக்கு முகம் கொடுத்தது.
B - ஐந்தாம் நூற்றாண்டில் உரோமப் பேரரசின் ஆட்சி நிர்வாகம் அரசியல் செயற்பாடுகள்ரீதியாக கிழக்கு, மேற்கென இரண்டாகப் பிளவுபடத் தொடங்கியது.
C - 'மனிதனின் மனித சுபாவம் சென்ம பாவத்தினால் அழிவுற்றது' என்ற கொள்கையைப் பெலாஜியுஸ் பரப்பினார்.
D - உரோமையின் ஆயராகிய திருத்தந்தை Iம் லியோ கொலை செய்யப்பட்டது அட்டில்லா என்னும் கோத்திரத் தலைவனாலாகும்.
E - கி. பி. 496 இல் கிளோவிஸ் என்னும் பிராங்க் கோத்திரத்தின் அரசன் கிறிஸ்தவ மறையை எதிர்த்துக் கொடிய கலாபனைக் காலமொன்றை உருவாக்கினார்.
இவற்றுள் சரியான கூற்று ஆவது,

| | | |
|---|---|---|
| (1) A, B மாத்திரம். | (2) B, C மாத்திரம். | (3) C, D மாத்திரம். |
| (4) C, E மாத்திரம். | (5) D, E மாத்திரம். | |

**38.** திருத்தந்தையர்கள் தமது அதிகாரத்தை திருத்தூதர்கள் வழியாகக் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளதாகவும் அதனால் அவர்களிடம் உள்ள அதிகாரம் மிகவும் உயர்ந்தது எனவும் அறிவிக்க "டிக்துஸ்பாப்பே" (Dictus Papae) என்னும் அறிக்கையை எழுதிய திருத்தந்தை,
(1) மேன்மை தங்கிய Iம் கிரகோரியார் ஆவார்.
(2) மேன்மை தங்கிய VIIம் கிரகோரியார் ஆவார்.
(3) மேன்மை தங்கிய XIIம் அருளப்பர் ஆவார்.
(4) மேன்மை தங்கிய Iம் நீக்கிலஸ் ஆவார்.
(5) மேன்மை தங்கிய Iம் சில்வெஸ்டர் ஆவார்.

**39.** 'நிறைவாழ்வின் வழி' (The Way of Perfection) 'உள்ளக மாளிகை' (The Interior Castle)ஆகிய ஆன்மீக நூல்கள் எழுதப்பட்டது
(1) புனித சிலுவை அருளப்பரால் ஆகும்.
(2) புனித அவிலா தெரேசாவினால் ஆகும்.
(3) புனித வின்சென்ட் டிபோல் அவர்களால் ஆகும்.
(4) புனித ஜோண் கிறிசோஸ்தம் அவர்களால் ஆகும்.
(5) புனித லொயலா இன்னாசியாரால் ஆகும்.

**40.** குருத்துவப் பயிற்சிக்காக உலகின் ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் குருமடங்களை நிறுவுதலை மறுமலர்ச்சித் திட்டமொன்றாக முன்வைத்தது,
(1) கல்சிடோன் திருச்சங்கம் ஆகும்.
(2) திரிதெந்தின் பொதுச்சங்கம் ஆகும்.
(3) எபேசு திருச்சங்கம் ஆகும்.
(4) நிசேயா திருச்சங்கம் ஆகும்.
(5) முதலாவது வத்திக்கான் பொதுச் சங்கம் ஆகும்.

**41.** சமூகநீதியை ஒட்டி 'றேரும் நோவாறும்' (Rerum Novarum) என்னும் சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை,
(1) III வது சின்னப்பர் (2) VI வது பத்திநாதர் (3) VII வது பத்திநாதர்
(4) XIII வது சிங்கராயர் (5) XXIII வது அருளப்பர் ஆவார்.

**42.** 'தனிமனித மாண்பையும், சுதந்திரத்தையும் வலியுறுத்தி நல்ல மனிதர்கள் ஒருங்கிணைந்தால் சமாதான சமூகம் உருவாகும்' இப்பிரதான படிப்பினையை மையமாகக் கொண்டிருப்பது,
(1) 'குருத்துவ உருவாக்குதல்' (Presbiterorum Ordinis) பற்றிய விதித்தொகுப்பாகும்.
(2) 'அவனியில் அமைதி' (Pacem in Terris) என்னும் சுற்றுமடலாகும்.
(3) 'திருவழிபாடு' (Sacrosanctum Concilium) பற்றிய கொள்கை விளக்கமாகும்.
(4) 'இறைவெளிபாடு' (Dei Verbum) பற்றிய மறைக்கொள்கை விளக்கமாகும்.
(5) 'சமூகத் தொடர்பு' (Inter Mirifica) பற்றிய விதித்தொகுப்பாகும்.

**43.** கி.பி. 1912 ல் இலங்கையின் தொல்பொருள் ஆய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட சிலுவை கிறிஸ்தவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பது,
(1) போர்த்துக்கேயரின் ஆதிக்கம் இலங்கையில் பரவலாக நிலவியமையை உறுதிப்படுத்துவதற்காக.
(2) இலங்கையின் மட்டில் நிலவிய தென் இந்தியத் தாக்கத்தினை எடுத்தக்காட்டுவதால்.
(3) அனுராதபுர காலத்தில் தொல்பொருள் ஆய்வின் கண்டுபிடிப்பாகையால்.
(4) போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான சான்று என்பதால்.
(5) உள்நாட்டு இயந்திரத்தொழில் நிபுணர்களின் திறமையை வெளிக்காட்டுவதால்.

**44.** பத்ரோஆடோ திட்டம் என்பது,
(1) மேற்கத்தைய மற்றும் கீழைத்தேய நாடுகளில் மறையைப் போதிக்க போர்த்துக்கேயருக்கும் ஸ்பானியருக்கும் இடையில் அதிகாரம் கொடுத்த முறை.
(2) இளவரசர் தர்மபாலாவை கோட்டையின் அரசனாக நியமிப்பதாக போர்த்துக்கல் IIIம் யுவான் அரசன் கொடுத்த சான்றிதழாகும்.
(3) தாங்கள் கைப்பற்றிய இடங்களில் மதப்பிரசாரம் செய்யும் உரிமை உரோமையிலிருந்து பிரான்சியருக்கு வழங்கப்பட்டமையாகும்.
(4) சோலப்பு ஆராச்சி என்னும் அரச தூதரை போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகருக்கு அனுப்பி முன்வைத்த வேண்டுகோளாகும்.
(5) போர்த்துக்கேயர் இந்தியாவில் கோவா நகரைத் தமது கீழைத்தேய வியாபார நடுநிலையமாக்கிக் கொள்ளுதலாகும்.

45. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் கிறிஸ்தவ மறையைப் பரப்ப வந்த மறைபோதகக் குழு,
(1) கப்புச்சியன் சபை (2) திருத்தூதர்கள் சபை (3) அகுஸ்தினார் சபை
(4) சலேசியன் சபை (5) சல்வடோரியன் சபை

46. மன்னாரில் கிறிஸ்தவத்தைத் தழுவிய 600 பேரளவான மக்களைக் கொல்வதற்குத் தமது படைக்கு ஆணையிட்ட மன்னன் யார்?
(1) தர்மபாலா (2) இராஜசிங்கன் (3) விமலதர்ம சூரிய
(4) சங்கிலி (5) காலிங்கன்

47. கி. பி. 1805 ல் இலங்கைக்கு வருகைதந்த மறைத்தூதுக்குழு
(1) சபை மறைத்தூதுச் சங்கம்
(2) லண்டன் மறைத்தூதுக் குழுவினர்
(3) பப்ரிஸ்ட் மறைத்தூதுக்குழு
(4) அமெரிக்க மறைத்தூதுக்குழு
(5) இரட்சணிய சேனையின் மறைத்தூதுவர் குழு

48. இலங்கையில் பாடசாலைகளில் கல்வி, ஒழுக்கம், ஒழுக்கநெறிகள் நடத்தை உருவாக்கம் ஆகிய மதிப்பீடுகள் வீழ்ச்சியுற பிரதான காரணமாய் அமைந்தது,
(1) உதவிபெறும் சமயப் பாடசாலைகள் அரசமயமாக்கப்பட்டமையாகும்.
(2) பெண்கள் ஆண்கள் கலவன் பாடசாலைகளின் ஆரம்பமாகும்.
(3) தேசிய மொழி கல்வி மொழிமூலம் ஆகுதலாகும்.
(4) எல்லாப் பாடசாலைகளும் வகைப்படுத்தலுக்குட்பட்டமையாகும்.
(5) இலவசக் கல்வியின் ஆரம்பமாகும்.

49. இலங்கைத் திருச்சபையின் தேசியமயப்படுத்தல் என்பது,
(1) திருவழிபாட்டில் போர்த்துக்கேய மொழி அகற்றப்பட்டமையாகும்.
(2) சமூகசேவைக்காகப் பொதுநிலையினரை நியமித்தமையாகும்.
(3) திவ்விய நற்கருணையைப் பகிர்ந்தளிக்கத் திருத்தொண்டர்களை நியமித்தமையாகும்.
(4) தேசிய தனித்துவத்தைக் கொண்ட திருச்சபையைக் கட்டியெழுப்புதலாகும்.
(5) ஆலயத்தில் பக்தர்களுக்காக ஆசன வசதிகளை ஏற்படுத்தியமையாகும்.

50. தொடக்க நூல் 2:21 - 22 இன் படி 'கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஓர் பெண்ணாக உருவாக்கினார்' இதன் பொருள்
(1) யூத சமுதாயத்தில் பெண்கள் மிகவும் தாழ் நிலையில் கணிக்கப்பட்டனர் என்பதாகும்.
(2) பெண் ஆணைவிடக் குறைந்தவள் என்பதாகும்.
(3) ஆண் பெண்ணை விட உயர்ந்தவன் என்பதாகும்.
(4) பெண்ணைப் படைக்க ஆணின் உடலிலிருந்து ஒரு பகுதி தேவைப்பட்டது என்பதாகும்.
(5) பெண் தலைவியோ அடிமையோ அல்ல என்பதாகும்.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **43**

විෂයය / பாடம்: **கிறிஸ்தவம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 2 | 21. | 5 | 31. | 4 | 41. | 4 |
| 02. | 5 | 12. | 5 | 22. | 4 | 32. | 4 | 42. | 2 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 1 | 33. | 5 | 43. | 4 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 1 | 34. | 5 | 44. | 1 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 3 | 35. | 5 | 45. | 3 |
| 06. | 1 | 16. | 4 | 26. | 3 | 36. | 2 | 46. | 4 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 1 | 37. | 1 | 47. | 2 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 5 | 38. | 2 | 48. | 1 |
| 09. | 1 | 19. | 5 | 29. | 3 | 39. | 2 | 49. | 4 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 2 | 40. | 2 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

AL/2022(2023)/43/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

**43 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ராயேல் மக்கள் பெற்ற விசேட இறை ஆசீர்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) குல முதுவர்கள் **இருவரின்** பெயர்களை எழுதி, அவர்களோடு இறைவன் தமது உடன்படிக்கையைப் புதுப்பித்த இடங்களின் பெயர்களையும் எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) யாக்கோபு அதிகமாக நேசித்த மகன் யோசேப்பு ஆவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் **மூன்றினை** எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) இன்றைய சமுதாயத்தில் நிலவும் பாவநிலை காரணமாக மனிதன் இறைவனிடமிருந்து விலகிச் செல்கிறான். பாவத்தை வெற்றிகொள்ள உம்மால் செய்யக்கூடிய செயல்கள் **நான்கினை** விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) இறைவாக்கினர் ஆமோஸ், இறைவாக்கினர் ஒசேயா ஆகியோரை அறிமுகப்படுத்த முன்வைக்கும் விசேட பெயர்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) ஒழுக்க விழுமியங்கள் உடைய ஓர் சமுதாயத்தில் இறைவனுக்கு ஏற்புடையவராவதற்கு ஓர் கிறிஸ்தவனாக செய்யக் கூடிய செயல்கள் **இரண்டினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) எசாயா இறைவாக்கினரின்படி இறைவனின் துன்புறும் ஊழியனின் பண்புகள் **மூன்றினை** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இன்றைய சமுதாயத் தலைவர்களுக்கு எரேமியா இறைவாக்கிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய தலைமைத்துவ முன்மாதிரிகைகள் **நான்கினை** எழுதி விபரிக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்று இயேசு தண்ணீரிலிருந்து கரைக்கு வந்தபோது வானம் திறக்கப்பட்டதன் மூலம் எடுத்துக்காட்டப்படும் விடயங்கள் **இரண்டு** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) "என் அன்பார்ந்த மகன் நீயே உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (மாற்கு 1:11) இவ்வெளிப்பாட்டின் மூலம் எடுத்துக்காட்டப்படும் இயேசுவின் அரச பண்பின் இயல்புகள் **இரண்டினையும்** எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) பாலைநிலத்தில் இயேசு முகம்கொடுத்த சோதனைகள் **மூன்றையும்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) திருமுழுக்கின் மூலம் நீர்பெற்ற அழைப்பிற்கு ஏற்ப இலங்கையின் தற்காலப் பிரச்சினைகளுக்கு நீர் எவ்வாறு முகம் கொடுப்பீர் என **நான்கு** காரணிகளின் கீழ் விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுப் பண்புகள் ஐந்தினையும் குறிப்பிட்டு, எசாயா இறைவாக்கினரின் அழைப்பில் இப்பொதுப் பண்புகள் காணப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய சமுதாயத்தின் சவால்கள் முன்னிலையில் உமது இறைவாக்குப் பணியினை **ஐந்து** காரணிகள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) புனித மத்தேயு எடுத்துக்காட்டும் நிறைவுகாலம் பற்றிய போதனையில் அடங்கியுள்ள விடயங்கள் **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) நீர் வாழும் இன்றைய சமுதாயத்தில் மற்றவர்களுக்கு ஓர் நற்செய்தியாக எவ்வாறு செயற்படுவீர் எனப் பிரதான காரணிகள் **ஐந்தின்** கீழ் விபரிக்குக. (10 புள்ளிகள்)

6. (i) புனித பவுலின் திருமுகங்களின் அமைப்பினை பிரதான விடயங்கள் **ஐந்தின்** கீழ் விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) பிற இனத்தாரின் திருத்தூதரான புனித பவுலின் வாழ்க்கையிலிருந்து இன்றைய மறைபோதகர்களுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய **ஐந்து** வழிகாட்டுதல்களை உதாரணங்கள் மூலம் விபரிக்குக. (10 புள்ளிகள்)

7. (i) புனித பவுலின் போதனையின்படி தகுதி உள்ள முறையில் திவ்விய நற்கருணையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஆயத்தமாகும் முறையை **ஐந்து** விடயங்களின் கீழ் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) 'நான் மிகவும் விரும்பும் சமய வழிபாட்டில் செயலுள்ள முறையில் பங்குபற்றுதல்' என்னும் தலைப்பில் உயர்தர மாணவர்களுக்கு நீர் ஆற்றும் ஓர் உரையில் அடங்கும் விடயங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

8. (i) மனிதத்துவத்தின் மாண்பு பற்றிய திருவிவிலிய சிந்தனையை **ஐந்து** காரணிகளினூடாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) நவீன இலங்கை இளைஞர் யுவதியர் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் **ஐந்தினை** அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு நீர் வழங்கும் கிறிஸ்தவ செய்தியினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

* * *

# கிறிஸ்தவம் II
## பகுதி I

01. (i) **சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ரயேல் மக்கள் பெற்ற விசேட இறை ஆசீர்கள் இரண்டினை எழுதுக.**

- இறைவனின் தனிச்சொத்து
- குருத்துவ அரச குலம்
- அர்ப்பணிக்கப்பட்ட / தூய இனம்

(1 × 2 = 2 புள்ளிகள்)

(ii) **குல முதுவர்கள் இருவரின் பெயர்களை எழுதி, அவர்களோடு இறைவன் தமது உடன்படிக்கையைப் புதுப்பித்த இடங்களின் பெயர்களையும் எழுதுக.**

- ஈசாக் - பெயர்செபா
- யாக்கோபு - பெத்தேல்

(2 × 2 = 4 புள்ளிகள்)

(iii) **யாக்கோபு அதிகமாக நேசித்த மகன் யோசேப்பு ஆவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் மூன்றினை எழுதுக.**

- யாக்கோபு மிகவும் அன்பு செய்த மனைவி ராக்கேலின் புதல்வனாக யோசேப்பு இருந்தமை
- சகோதரரைப் பற்றித் தேடிப் பார்த்தமை
- யாக்கோபுவுக்கு முதிர்ந்த வயதில் யோசேப்பு பிறந்தமை
- இறைவனின் விசேட பார்வை யோசேப்புவுக்கு இருந்தமையை யாக்கோபு உணர்ந்தமை

(2 × 3 = 6 புள்ளிகள்)

(இவற்றுள் ஒன்றிற்கு 2 புள்ளிகள் வீதம் மூன்றுக்கு ஆறு புள்ளிகள் வழங்குக.)

(iv) **இன்றைய சமுதாயத்தில் நிலவும் பாவநிலை காரணமாக மனிதன் இறைவனிடமிருந்து விலகிச் செல்கிறான். பாவத்தை வெற்றி கொள்ள உம்மால் செய்யக்கூடிய செயல்கள் நான்கினை விளக்குக.**

- இறைவனுக்கும் அயலாருக்கும் எதிராக செய்யும் செயல்களே பாவமாகும். இன்றைய சமுதாயத்தில் மனிதனின் சுயநலத்தினாலும் ஆணவத்தினாலும் பாவச் செயல்கள் மிகுந்து காணப்படுகின்றன. பாவத்தை மனிதன் தழுவிக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவனிடமிருந்து விலகிச் செல்கின்றான். எனவே பாவத்தையும் அதற்கான சந்தர்ப்பங்களையும் வெற்றிக் கொள்ளும் போது இறைவனை நெருங்கி வருகின்றான். இப்பாவச் சந்தர்தர்ப்பங்களையும் பாவத்தையும் வெற்றிக் கொள்ள இறைவனையும் மனிதனையும் ஒன்றிக்கும் செப, தவ, ஒறுத்தல் முயற்சிகள் மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கு உதவுகின்றன.

- பொருளாசை, அதிகார மோகம், சுயநலம் என்பன மனிதனை பாவத்திற்கு இட்டுச் செல்லும் வழிகள் ஆகையால் இவற்றிலிருந்து விடுபட்டு இறைவனை நெருங்கி வர தேவையான அருளை இறைவனிடம் கேட்க வேண்டும்.

- பத்துக் கட்டளைகளை கடைப்பிடிப்பதன் மூலம் ஒழுக்க விழுமிய வாழ்க்கையை வாழ முடியும்.

- ஞாயிறு திருப்பலியில் பங்கு பற்றி நற்கருணையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஆன்மீக சக்தியைப் பெறுவதால் பாவச் சந்தர்ப்பங்களை வெற்றிக் கொள்ளலாம்.

- இல்லங்களில் குடும்பமாக செபித்தல், பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழுதல், கணவன் மனைவி ஒருவர் ஒருவருக்கு பிரமாணிக்கமாக வாழுதல் என்பன நற்செயல்களுக்கு எம்மை இட்டுச் செல்லும்.

- பங்கிலுள்ள மறைத்தூதுச் சபைகள், ஒன்றியங்கள் என்பவற்றில் இணைந்து, பணியாற்றுவதன் மூலம் பாவத்திற்கு ஏதுவான செயல்களில் ஈடுபடாது வாழ முடியாது.

- தினமும் திருவிவிலியத்தை வாசித்து அதனை வாழ்வாக்க எம்மை அர்ப்பணிப்பதன் மூலம் பாவச் செயல்களை தவிர்த்து வாழ முடியும்.

(இவை போன்ற கருத்துக்கள் நான்கு எழுதி விளக்கியிருப்பின் $4 \times 2 = 08$ புள்ளிகள் வழங்கவும்.)

($4 \times 2 = 8$ புள்ளிகள்)

02)(i) **இறைவாக்கினர் ஆமோஸ், இறைவாக்கினர் ஒசேயா ஆகியோரை அறிமுகப்படுத்த முன்வைக்கும் விசேட பெயர்களை எழுதுக.**

- ஆமோஸ் – சமூக நீதியின் இறைவாக்கினர்
- ஒசேயா – இறைவனின் அன்பின் இறைவாக்கினர்

(02 × 01 = 02 புள்ளிகள்)

(ii) **ஒழுக்க விழுமியங்கள் உடைய ஒரு சமுதாயத்தில் இறைவனுக்கு ஏற்புடையவராவதற்கு ஓர் கிறிஸ்தவனாக செய்யக் கூடிய செயல்கள் இரண்டினை எழுதுக.**

- ஒரே கடவுள் மேல் நம்பிக்கை உடையவராக வாழ்தல்
- பத்துக் கட்டளைகளின் படி வாழ்தல்
- இறையாட்சி மதிப்பீடுகளை பின்பற்றி வாழ்தல்
- ஒழுக்க விழுமியங்களுடைய ஒருசமுதாயம் என்பது இறைவனால் இஸ்ரயேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட ஒழுக்க வாழ்க்கைக்கான பத்துக் கட்டளைகளின் படி வாழும் ஒரு சமூகமாகும். இத்தகைய சமூகத்தில் இறைவனுக்கு ஏற்புடைய ஓர் கிறிஸ்தவனாக வாழ இப்பத்துக் கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்தல்.
- வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களை இறைவனின் துணையுடன் செபத்தினாலும் அருளடையாளங்களை அடிக்கடி பெற்றுக் கொள்வதினாலும் வாழ முடியும்.
- திருப்பலியில் பங்கு பற்றுவதாலும் திருச்சபையின் படிப்பினைகளின் படி வாழ்வதோடு பிறர் அன்பு செயல்களில் ஈடுபடுவதனாலும் வாழ்க்கையில் இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ முடியும்.

இதற்குப் பொருத்தமான வகையில் விடைகளை எழுதியிருப்பின் புள்ளிகளைள் வழங்கவும்

(02 × 02 = 04 புள்ளிகள்)

(iii) **எசாயா இறைவாக்கினரின் படி இறைவனின் துன்புறும் ஊழியனின் பண்புகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.**

- “முறிந்த நாணலை மீண்டும் உடைப்பதில்லை. அணைந்து கொண்டிருக்கும திரியை யாரும் அணைத்து விடுவதில்லை...;; இது பலவீனமான கைவிடப்பட்ட மக்களை எடுத்துக் காட்டும் அடையாளமாகும். பணியாளன் தம் பணியை ஆற்றுவதற்காக தொல்லை மிக்க நடவடிக்கைகளில் ஈடுபடாதது இங்கு உணர்த்தப்படுகிறது.
- இனங்களுக்காக நடுநிலை வகிக்கும் அவர் பலத்தை இழக்காததோடு நீதி நிலைநாட்டப்படும் வரை எவ்வித மனத்தளர்ச்சியும் அடையாமல் பொறுமையோடு செயற்படுகின்றார்.
- இஸ்ரயேல் மக்களின் சீர்திருத்தம் காரணமாக ஊழியன் இறைவனில் தங்கியிருத்தல் விடுதலை வீரனின் செயலாகும்.
- அனைத்து மக்களினங்களுக்கும் மீட்பைக் கொணருவது அவருடைய பணியாக இருப்பதோடு மக்களுக்கு ஒளியாக வழிகாட்ட வேண்டியுள்ளது.
- தம் பணியில் இறைவன் அவரை பாதுகாப்பது மட்டுமல்லாமல் அவனது வெற்றி இறைவனிலேயே தங்கியிருக்கின்றது.

- இறைவனின் பணியாளர் துன்பங்கள் மத்தியிலேனும் இறைவனுக்கு செவிமடுக்க விருப்பத்தோடு கீழ்ப்படிந்து இருக்கின்றார். அவரது முக்கிய பணியாக இருப்பது இறைவனுக்கு வெளிப்படையாக செவிமடுப்பதாகும். அவ்வாறு செவிமடுப்பது தனக்கு வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையினூடாக ஏனையவர்களை கட்டியெழுப்புவதற்காகவே. தம் பணியில் அவர் வைத்திருக்கும் ஈடுபாட்டினால் தாம் வெளிப்படுத்தும் வார்த்தைகள் காரணமாக பணியாளர் துன்புறுத்தப்படுகின்றார். இவ்வாறு அனைத்தையும் அவர் தாங்கிக் கொள்கின்றார். தம் மாசற்ற தன்மையைப் புலப்படுத்துவதற்காக தன்னை இறைவனுக்குக் கையளிக்கின்றார்.
- பணியாளராக இருப்பது தளர்வுறாத ஆழமான நம்பிக்கையாகும். தன்னைத் துன்புறுத்தும் மக்கள் மத்தியில் மௌனமாக இருப்பது எவராலும் தன்னை தோல்வியுறச் செய்ய இயலாது என்ற இறைவன் மேல்கொண்ட நம்பிக்கையினாலே ஆகும்.
- நான்காம் பாடல் (எசா 52: 13-53:12) இப்பாடல் ஊழியன் பற்றிய மிகவும் பிரபல்யமான பாடலாகும். இங்கு ஊழியன் முகங்கொடுக்கின்ற உடல் ரீதியான துன்புறுத்தல்கள் நேரடியாக விபரிக்கப்பட்டுள்ளது.
- பணியாளன் படும் வேதனை எவ்வளவு கொடூரமானது என்பதைக் காட்டுவதற்கு பணியாளனை மனித உருவின் அருவருப்பான நிலையையும் அவலட்சண தன்மையின் காரணமாக மக்கள் ஏற்றுக்கொள்ளாத தன்மையையும் எடுத்துக்காட்டுகிறன.
- பாவிகளுக்காக அவர் தம் வாழ்வைப் பலியாக்குவதால் இறைவன் அவருக்கு வெற்றியளிக்கின்றார்.
- மக்கள் ஆச்சரியப்படும் விதத்தில் இறை ஊழியனின் தூதுப்பணி மற்றும் அவர் உயர்த்தப்படுவது பற்றி கூறப்படுகிறது. இறை ஊழியனுக்காக இறைவன் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதாக அவர் அறிந்து கொள்கின்றார். விசேடமாக அரசர்கள் மற்றும் மக்கள் மத்தியில் திகில், பயத்தை உண்டாக்கி ஊழியனின் பாடுகளின் ஊடாக இறைவனின் வலிமைமிகு கரத்தால் வெளிப்படுத்தினார். இறைவன் இவ்வாறு ஒரு நபரை உயர்த்துவதை நம்ப முடியாது என சிலர் கூறுகின்றனர்.
- உலர்ந்த தரையில் இருந்து துளிர்விடுவது போல் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நபராக எடுத்துக்காட்டுகின்றார். ஆயினும் நம்பிக்கையை தகர்த்தெறிந்து ஊழியன் துன்பத்திற்கு உட்படுகின்றார். அவர் மக்களால் புறக்கணிப்படுகின்றார். துரத்தப்படுகின்றார். இறுதியில் மக்கள், ஊழியன் பற்றிய தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்கின்றனர். பழைய ஏற்பாட்டில் மன்னிப்புப் பெறும் பொருட்டு நரபலி செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது இங்கு மட்டுமே. இவர் அந்தத் துன்பங்களினால் மக்களை இறைவனோடு தொடர்புபடுத்தினார். அங்கு அவர் இவ்வளவு காலம் வழிதவறி இறைவனிடமிருந்து பிரிந்திருந்ததை மக்கள் உணர்ந்து கொள்வர். இப்பாவம் போக்கும் பலியினால் ஊழியன் மகிமைப்படுத்தப்படுகின்றார்.
- இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் துன்புறும் ஊழியனின் மறு உரு முழுமையாக உயிர்ப்பிக்கப்பட்டது. ஊழியன் முன்வைக்கின்ற அகிம்சையான வாழ்வு முறையை கிறிஸ்து பின்பற்றினார்.

(இவற்றுள் ஏதாவது 3 விடயங்களை குறிப்பிட்டு விளக்கியிருப்பின் ஒரு விடயத்திற்கு 2 புள்ளிகள் வீதம் வழங்குக.)

(03 × 02 = 06 புள்ளிகள்)

**(iv) இன்றைய சமுதாயத் தலைவர்களுக்கு எரேமியா இறைவாக்கினரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய தலைமைத்துவ முன்மாதிரிகைகள் நான்கினை எழுதி விபரிக்குக.**

- எரேமியா இறைவாக்கினர் இறைவனின் அழைப்பினை ஏற்றுக்கொண்டு இறைவன் தம்மிடம் எதிர்பார்த்த பணியை நேர்மையாகவும், தைரியத்துடனும் நிறைவேற்றியவர் ஆவர். அவரைப் போன்று தலைமைத்துவப் பணிக்கு அழைக்கப்படும் ஒருவர் தனது அழைப்பின் பொறுப்புக்களையும், கடமைகளையும் புரிந்து கொள்ளுதல்.
- திடமாகவும், உண்மை, நேர்மை உடையவராகச் செயற்படுதல்.
- இறைவனே இப் பணிக்காகத் தன்னை அழைத்தவர் ஆகையால் அனைத்திலும் இறைவனின் துணையை நாடி அவரிடமே அனைத்தையும் ஒப்படைத்துச் செயற்படல்.
- தான் இறைவனின் கரங்களில் ஒரு சிறு கருவியே ஆகையால் இறைவனின் சித்தப்படி தன்னை வழிநடத்த அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படியும் மனப்பான்மை உடையவராதல்.
- நீதி, சமத்துவத்துடன் செயற்படல்.
- தலைவர் எப்போதும் ஒரு பணியாளனே என்பதை மனத்திற் கொண்டு தாழ்மையுடன் செயற்படுதல்.
- தன் உடன் பணியாளர்களை அன்புடனும் மனிதாபிமானத்துடனும் வழிநடத்துதல்.

(இவை போன்ற கருத்துக்கள் நான்கு எழுதி விளக்கியிருப்பின் 4 × 2 = 08 புள்ளிகள் வழங்கவும்.)

03)(i) **திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்று இயேசு தண்ணீரிலிருந்து கரைக்கு வந்த போது வானம் திறக்கப்பட்டதன் மூலம் எடுத்துக்காட்டப்படும் விடயங்கள் இரண்டு எழுதுக.**

- இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றுத் தண்ணீரிலிருந்து கரைக்கு வந்தபோது வானம் திறக்கப்பட்டது. இதன் மூலம் மனிதன் இறைவனிடமிருந்து பிரிந்து இருப்பது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பது தெளிவாகின்றது.
- விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே ஒரு தொடர்பாடல் இடம் பெறுவதாகும். (எசா 64:1-2)

(01 × 02 = 02 புள்ளிகள் )

(ii) **"என் அன்பார்ந்த மகன் நீயே உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" (மாற்கு 1 : 11) இவ்வெளிப்பாட்டின் மூலம் எடுத்துக்காட்டப்படும் இயேசுவின் அரச பண்பின் இயல்புகள் இரண்டினையும் எழுதுக.**

- திருப்பாடலில் இரண்டாவது பாடல் அரச அருட்பொழிவின் போது பாடப்பட்டதாகும். அதற்கேற்ப "நீயே என் அன்பார்ந்த மகன்" என்பதன் வழியாக இயேசு ஓர் அரசன் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. ஆயினும் இயேசு உலக அரசர் போன்றவர் அல்லர். கடந்த கால இஸ்ரயேல் அரசர்களை விட முற்றிலும் வேறுபட்டவர் ஆவார்.
- இயேசு அழைக்கப்பட்டிருப்பது இருக்கையில் அமர்ந்திருக்கும் அரசராக இருப்பதற்கல்ல பணியாளனாக, அரசனாக, துன்புறும் அரசனாகுவதற்காகவே எசாயா 42ல் துன்புறும் ஊழியனின் பாடலில் அடங்கியுள்ள "இவர் பொருட்டுப் பூரிப்படைகிறேன்" என்பதோடு திருப்பாடல் 2ஐத் தொடர்பு படுத்தி இயேசுவின் அழைப்பு எடுத்து காட்டப்படுவது அதனாலேயே ஆகும்.

(02 × 02 = 04 புள்ளிகள் )

(iii)**பாலைநிலத்தில் இயேசு முகம்கொடுத்த சோதனைகள் மூன்றையும் சுருக்கமாக விளக்குக.**
- கல்லை அப்பமாக மாற்றித் தனது வல்லமையை வெளிப்படுத்த (வல்லமை)
- தேவாலயத்தின் உச்சியிலிருந்து பாயும் போது தேவ தூதர்களால் பணிவிடை பெறுபவராகப் புகழைப் பரப்ப (புகழ்)
- சாத்தானை வணங்கி அனைத்து நாடுகளைக் கைபற்றுவதற்கு ( செல்வம் ) இஸ்ரயேல் அரசர்கள் வல்லமை, புகழ் மற்றும் செல்வம் ஆகியவற்றின் மீது தங்களது அரசைக் கட்டி எழுப்பினாலும் இயேசுவின் அரசில் அவை நிராகரிக்கபடுகின்றன. செல்வம், வல்லமை, புகழ் ஆகியவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்ட அமைப்பில் மற்றவர்களைச் சுரண்டி துன்பத்திறகுள்ளாகுகின்றனர். ஆயினும் பணி மற்றும் அடுத்தவரின் முயற்சியினால் கட்டப்பட்ட அமைப்பானது சகோதரத்துவம், கூட்டுறவு மற்றும் ஒன்றிப்பின் அமைப்பாகும்.
- துன்புறும் அரசன் பணியின் அரசன் அல்ல என்பது திருத்தூதர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.எனவே தான் பெரிய யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய திருத்தூதர்கள் இயேசு மாட்சிமையோடு வரும் போது வலம் மற்றும் இடப்புறம் அமரக் கேட்டுக் கொண்டனர்.

- தன்னைப் போன்று சீடர்களும் பணியின் அரசர்களாக இருக்க வேண்டும் என்பது இயேசுவின் போதனையாக இருந்தது. ( மாற் 10:42-45 ) அவ்வாறாயின் திருமுழுக்குப் பெற்ற எம் அனைவரின் அழைப்பும் பணியின் அரசர்களாக இருப்பதாகும்.

( இவற்றுள் மூன்றினை விபரித்திருப்பின் 02 × 03 = 06 புள்ளிகள் )

**(iv) திருமுழுக்கின் மூலம் நீர் பெற்ற அழைப்பிற்கு ஏற்ப இலங்கையின் தற்காலப் பிரச்சினைகளுக்கு நீர் எவ்வாறு முகம் கொடுப்பீர் என நான்கு காரணிகளின் கீழ் விளக்குக.**

- திருமுழுக்கின் அழைப்பினுள் கிறிஸ்தவர்களாகிய எமது கடமைகளும் பொறுப்புக்களும். திருமுழுக்குப் பெறும்போது ஒவ்வொரு கிறிஸ்தவரும் குருவாக, இறைவாக்கினராக மற்றும் அரசராக கிறிஸ்மா தைலத்தால் அபிசேகம் செய்யப்படுகின்றனர். இதன் காரணமாக திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் குருத்துவ, இறைவாக்கு, அரச கடமைகள் அளிக்கப்படுகிறன.

- குருத்துவ கடமைகளும் பணியும்.

  குரு என்பவர் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடைநிலையினராக இருக்கின்றார். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் தனித்துவமான இடைநிலையாளர் கிறிஸ்து என எபிரேயருக்கு எழுதிய கடிதம் மூலம் எடுத்துக் காட்டுகின்றது. திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவனும் பொதுக்குருத்துவத்தைப் பெற்றுள்ளார். அதற்கு ஏற்ப அவன் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நடுநிலையாளனாக உள்ளான். அவன் இடைநிலையாளனாவது ஏனையவர்களுக்காகச் செபிக்கும் அளவிற்கே திருப்பிலியில் சொல்லப்படும் விசுவாசிகள் மன்றாட்டு, பரிந்துரைச் செபம் எனவும் அழைக்கப்படுகின்றது. அதில் விசேட விதமாக ஏனையவர்களுக்காகச் செபிக்கின்றோம் ஆயினும் எமது பரிந்துரைச் செயலை விசுவாசிகள் மன்றாட்டோடு மட்டும் நிறுத்திவிடக் கூடாது. அன்றாட தனிச் செபங்களில் எமது மற்றும் எமக்கு நெருங்கியவர்களின் தேவைகளுக்காக மட்டும் அல்ல எமக்கு நெருக்க மற்றவர்களின் பொதுவான தேவைகளுக்காகச் செபித்து மெய்யான குருவாக ஏனையவர்களுக்காக நாம் அனைவரும் இறைவன் முன் நிலையில் பரிந்துரை செய்ய வேண்டும்.

3. மேய்ப்பு (அரச) பணி

   மேய்ப்பராக ஒரு தலைவன் தலைவன் பணியாளனாக வேண்டும் என்பது இயேசுவின் முக்கிய படிப்பினையாக இருந்தது. ( யோவா 13:13-14 ) அவர் அவ்வாறு போதித்தது மட்டும் அல்ல இறுதி இராவுணவின் போது அவர் அதைச் செயலினால் உறுதிப்படுத்தினார். (13:4 - 5) அவ்வாறாயின் நாமும் பணிபுரியும் தலைவர்களாக ஆக வேண்டும். இயேசுவின் திருமுழுக்கின் போது வானிலிருந்து ஒலித்த குரலொலியின் அர்த்தமும் அதுவே என மேலே நாம் கற்றுள்ளோம். நாமும் திருமுழுக்குப் பெறுவது பணியாள் தலைவனாகுவதற்காகவே என்பதை மறந்து விடக் கூடாது.( யோவான் 10:11-16 ) இயேசு ஒரு நல்லாயனாக இருக்கின்றார். அவர் தான் கூறியதை வார்த்தைக்கு மட்டும் வரையறுக்காது தாம் கூறியபடியே தன் ஆடுகளுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்தார். அவ்வாறு செய்து மனுகுலத்திற்கு விடுதலையைப் பெற்றுத்தந்தார். நாமும் பல்வேறு துறைகளில் மேய்ப்பவர்களாகச் செயற்படுகின்றோம். அங்கு எமது கடமையாக இருப்பது என்னவென்றால் அந்தத் துறையில் தலைவனாக மிளிர்வது அல்ல எமது தலைமைத்துவத்தின் கீழ் பணி பெறுபவர்களுக்காகப் பலியாவதாகும். இயேசு அவ்வாறு

தன்னைப் பலியாக்கியது மனுக் குலத்தின் மீது காட்டிய அளவற்ற அன்பினாலேயே. ஆதனால் நாமும் எமது மந்தைகளுக்காகப் பலியாக வேணடியது அவர்கள் மீது வைத்துள்ள அன்பின் நிமித்தமே.

4. இறைவாக்குப் பணி

இறைவாக்கினர் என்பவர் இறைவனுக்காகப் பேசுபவர். காலத்தின் அறிகுறிகளை அறிந்து ஒருவருடைய நிலை, பதவி, தமக்குக் கிடைக்கும் பிரதிபலன் என்பவற்றைக் கூட எதிர்பார்க்காது இறைசெய்தியை வழங்குபவர். (எரே 11: 2) பழைய ஏற்பாட்டில் செய்தி மற்றும் செய்தியை வழங்குனர் என இரு நபர்களாவர். ஆயினும் புதிய ஏற்பாட்டில் செய்தி மற்றும் செய்தியை வழங்குபவர் என இருவர் அல்ல ஒருவரே. இயேசு இறைவார்த்தையாக இருப்பது போல இறைவார்த்தையை வெளிப்படுத்துபவருமாயிருக்கிறார்.

- திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவனும் ஒரு இறைவாக்கினராவான். இறைவார்த்தையைப் பறைசாற்ற வேண்டுமென்றால் நாம் சரிவர இறைவார்த்தையைக் கற்றிருக்க வேண்டும். இறைவார்த்தையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் நாம் ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையை வாசிக்க வேண்டும். அப்படியென்றால் ஒவ்வொரு நாளும் திருவிவிலியத்தில் ஒரு அதிகாரம் அல்லது திருவிவிலியத்தின் ஒரு பகுதியை வாசித்து அதனைத் தியானிகக் நேரத்தை ஒதுக்க வேணடும் ஒவ்வொரு நாளும் வாசிக்கின்ற இறைவார்த்தையின் படி வாழ்ந்து நமக்குக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் உச்சப்பயனைப் பெற்றுத் தமது சொல்லாலும் செயலாலும் வாழ்க்கையாலும் இறைவார்த்தையைப் பறைசாற்ற வேண்டும்.

(காரணிகள் நான்கிற்கு 1 × 4 = 04 புள்ளிகளும்
செயற்படும் விதத்திற்கு 1 × 4 = 04 புள்ளிகளுமாக மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II

**நோக்கம் :**

**இறைவாக்குரைப்பது இறைவனின் விசேட அழைத்தலாகும்.**

**04.(i) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுப் பண்புகள் ஐந்தினையும் குறிப்பிட்டு, எசாயா இறைவாக்கினரின் அழைப்பில் இப்பொதுப் பண்புகள் காணப்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக.**

- காட்சி அல்லது விசேட அனுபவம்
- பணியை ஒப்படைத்தல்
- அழைப்பை ஏற்கத் தயங்குதல்
- தைரியப்படுத்தல்
- அனுப்பப்படல்

**இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பின் பண்புகள்**

1. காட்சி அல்லது விசேட அனுபவம்

   இதனூடாக எமக்கு வெளிப்படுத்தப்படுவது இறைவாக்கினரின் அழைப்பு இறைவனால் கொடுக்கப்படுவது என்பதாகும். இறைவனுடைய அதி உன்னதமான தன்மையும் இறைவாக்கைப் பெறும் நபருடைய பலவீனத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய காட்சிகளில் இறைவனுடைய உன்னதமான தன்மையும் மகிமையான பிரசன்னமும் மேகமுழக்கம், மேகம், பனி, புகை, நிலநடுக்கம், காற்று ஆகிய அடையாளங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு அழைக்கப்பட்ட இறைவாக்கினருடைய செய்தியானது வல்லமை மிக்கதாகும். அதிகாரமும் பலமும் மிக்கதாகும். உதாரணம் திருக்கோவிலில் இறைவனின் பிரசன்னத்தை எசாயா காட்சியினூடாக அனுபவித்தார். (எசாயா 6 : 1 – 4)

2. பணியை ஒப்படைத்தல்

   ஒவ்வொரு இறைவாக்கினருக்கும் விசேட விதமாக பொறுப்புக் கொடுக்கப்படுகின்றது. இறைவாக்கினரை தெரிவு செய்வதற்காக இறைவனுடைய விருப்பம் என்னவென்று தெளிவுபடுத்துவதற்கு பொறுப்புக் கொடுக்கும் போது வெளிப்படுத்தப்படுகின்றது. அதனூடாக அவர் செய்ய வேண்டிய பணி, செய்ய வேண்டிய செயல் என்பனவற்றை இறைவன் அவர் முன்னிலையில் வெளிப்படுத்துவார்.

   உ–ம்: எசாயாவுக்கு கொடுக்கப்படுவது. கடினமான மனம் கொண்ட இஸ்ரயேல் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதே (எசா 6 : 9 – 10)

3. அழைப்பை ஏற்றுக்கொள்ள தயங்குதல்

இறைவாக்கினர் தனக்கு கொடுக்கப்படும் பணியை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றார். அதைத் தட்டிக்கழிக்க முயற்சி செய்கின்றார். இதற்கான காரணம் மக்கள் கேட்க விருப்பமற்றதை இறைவாக்கினர் தெரிவிக்க வேண்டியிருப்பதாலேயே. அதன் பிரதிபலனாக அனேகமான துன்ப துயரங்கள் வேதனைகள் மற்றும் புறக்கணிப்புக்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

உ-ம்: எசாயா தமது விருப்பமின்மையை வெளிப்படுத்துவது தமது தகுதியற்ற தன்மையைக் கூறுவதனாலாகும். (6 : 5)

4. தைரியப்படுத்துதல்

துன்பங்கள், அச்சுறுத்தல்கள் மத்தியில் தமது பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற இறை வாக்கினர்களை இறைவன் தைரியப்படுத்துகின்றார். இறைவன் அவர்களோடு இருப்பதாகவும் துன்ப வேளைகளில் முகங்கொடுக்க தேவையான சக்தியையும் தைரியத்தையும் அளிப்பதாகவும் உறுதியளிக்கின்றார். உ-ம் எசாயாவின் உதடுகளைத் தூய்மைப்படுத்துகின்றார். (6 : 6 – 7)

5. அனுப்பப்படல்

எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில் செய்தியை வெளிப்படுத்துவதற்கு இறைவாக்கினர் அனுப்பப்படுகின்றார். இவ்வாறு இறைவனின் வல்லமையால் நிரப்பப்பட்ட இறைவாக்கினர் தாம் பெற்ற செய்தியை வெளிப்படுத்துவதற்குச் செல்கின்றார்.

உ-ம்: எசாயா கடின உள்ளம் கொண்ட மக்களிடையே அதாவது கேட்டும் உணராத மக்களிடையே அனுப்பப்படுகின்றார்.

( பண்புகள் ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதம் 5 புள்ளிகளும் இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பின் விளக்கத்திற்கு ஒன்றிற்கு ஒரு புள்ளி வீதம் 5 புள்ளிகளுமாக 10 புள்ளிகள்)

(II) **இன்றைய சமுதாயத்தின் சவால்கள் முன்னிலையில் உமது இறைவாக்குப் பணியினை ஐந்து காரணிகள் மூலம் விளக்குக.**

- இறைவாக்கினர் என்பவர் இறைவனால் அழைக்கப் பெற்று அவருடைய செய்தியைத் திடமுடன் மற்றவர்களுக்கு எடுத்துரைக்க அழைக்கப்பட்டவராவர்.
- திருமுழுக்கின் வழியாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த இறைவாக்குப் பணிக்கு அழைப்பும் பெறுகிறான்.
- காலத்தின் அறிகுறிகளின் ஊடாக இறைவன் பேசுவதை உணர்ந்து செபத்தினூடாக அவற்றைப் புரிந்து கொள்ளுதல்.
- இறைவனின் வெளிப்பாட்டை மக்களுடன் பகிர்ந்து இறைவனின் செய்திக்கு ஏற்பத் தானும் வாழ்ந்து, அயலவர்களுக்குத் தம் வாழ்க்கை முன்மாதிரிகையால் கற்றுக்கொடுத்தல்.
- இன்றைய சமுதாயத்தில் நிலவும் அரசியல், பொருளாதார, ஊழல்களால் துன்புறும் மக்களின் சார்பாக நின்று அவர்களின் நலன் கருதி உழைத்தல்.

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

- இன்றைய சமுதாயத்தில் இறைவனை மறந்து லௌகீக நாட்டங்களில் மூழ்கியிருக்கும் மனிதனின் வாழ்வை இறைவன் பால் திருப்ப அஞ்சாத மனதுடன் முன்வருதல்.
- பொதுநலன் கருதி செயற்படுவோருக்கு உதவி செய்தல் செபத்தினாலும், தன்னால் இயன்ற உடல் உழைப்பினாலும் அவர்களுக்கு உதவுதல்.

(இவை போன்ற 5 விடயங்களுக்கு 2 × 5 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(25) WWW.PastPapers.WiKi (25)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA